[31st March 1965

THE HON. SRI V. RAMAIAH : They will also be realigned and refixed.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ரோடுகளில் இருந்த மரங்களெல்லாம் ஏலத்திற்கு விட்டு வெட்டியாகி விட்டன. வெட்டிய மரங்களுக்கான ஏலத் தொகை சர்க்காருக்கு நேரடியாக வந்து விடுகிறதா? அல்லது அதில் கார்ப்பரேஷனுக்கும் பங்கு உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நகர எல்லைக்குள் இருக்கக்கூடிய மரங்கள் கார்ப்பரேஷனுக்குச் சொந்தம் என்று முடிவு ஆகியிருக்கிறது. அதிலிருந்து வசூல் ஆகக் கூடிய தொகை கார்ப்பரேஷனுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஏலம் போட்ட மரங்களின் மதிப்பு 22,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு மரம் 500 ரூபாய்க்குப் போகும். நல்ல கனமான மரங்கள் சாலையில் இருந்தன. இந்த ரேட் ஏன் குறைவாக இருக்கிறது? எங்காவது ஊழல் நடந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒப்பந்த ஏலம் போடுகிறார்கள். என்ன ஊழல் இருக்கும் என்று தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் மரத்தின் பருமனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அவைகள் டீக் மரம் அல்ல. இங்கே அவைகளைத் தூங்குமூஞ்சி மரம் என்று சொல்வார்கள். அது விறகுக்குக் கூடப் பயன்படுமா என்பது சந்தேகம். ஒப்பந்த ஏலம் போடப்படுகிறது.

இரயில்பாதை—சாலைக்கடவில் மேம்பாலம்

*394 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் திருக்கோகர்ணம் ரயில்வே கேட்டில் மேம்பாலம் ஒன்று கட்டும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆம், புதுக்கோட்டை-திருச்சிராப்பள்ளி சாலையின் 2-5 கல் தொலைவிலுள்ள சாலை இருப்புப் பாதைச் சந்திப்பில் மேம்பாலம் ஒன்றைக் கட்டும் திட்டம் உள்ளது. இத் திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, தஞ்சைப்-பட்டுக்கோட்டை, தஞ்சை-புதுக்கோட்டை செல்லும் பாதையில் ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில் இரண்டு பாதைகள் இருக்கின்றன. அந்த இடங்களில் மேம்பாலம் கட்ட கோரிக்கை வந்ததா? அது கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கோரிக்கை வந்ததாகத் தெரியவில்லை. அந்த மாதிரிக் கோரிக்கை வந்தால் அரசாங்கம் கவனிக்கும். அப்போது இருக்கிற ப்ரையாரிடிக்குத் தகுந்த மாதிரி ஏற்பாடு செய்யும்.